# அமுதசுரபி

ஜனவரி 2013

விலை: ரூ.15/-



# களிமண்



செல்போன் ஒலித்தது. "குழந்தை ஒழுங்கா ஸ்கூல் போயாச்சா? எதுவும் படுத்தலையே", கரிசனம் தோயக் கேட்டான் வினோத்.

"நீங்க வேற, அவனே குளிச்சி துடைச்சிகிட்டான். சர்ட் பட்டன் போட ரேஸ், எனக்கும் அவனுக்கும். கடகடன்னு சாப்பிட்டு, பத்து நிமிஷம் முன்னாடியே ஐயா ரெடி"

அலுவலகம் போய்க்கொண்டே விவரித்தாள் வித்யா.

"ஏதோ மேஜிக். என்னை பாடாய்ப்படுத்தறவன் நீயின்னா அடங்கி ஒழுங்கா இருக்கான்!"

மனதில் மனைவியைப் பற்றிய பெருமை!

"மீட்டிங் முடிஞ்சு நாளைக்கு நான் ரிடர்ன் ஆகிடுவேன். ராத்திரி சாப்பாடு வீட்டிலதான். மிளகு ரசம் செஞ்சிடு வித்யா".

வினோத் அலுவலக விஷயமாக பெங்களூருக்கு அடிக்கடி செல்லவேண்டியிருந்தது. அந்த நாட்களில் மட்டுமே அவர்களின் சுட்டிப்பையன் ஆதித்யாவை பள்ளிக்குக் கிளப்புவது அவள் வேலை. மற்ற நாட்களில் சமையலை முடித்துவிட்டு எட்டுமணிக்கெல்லாம் கிளம்பிவிடுவாள். ஐடி கம்பெனிகளில் புதிதாய் வேலைக்கு சேருபவர்களுக்கு ஆங்கிலம் பேசக் கற்றுத்தரும் ஒரு நிறுவனத்தை நடத்திக்கொண்டிருந்தாள். என்ன ஓட்டமானாலும் ஒருவாய் சாப்பிட்டுவிட்டே கிளம்பவேண்டும் என்பதை ஒரு வழக்கமாய் வைத்திருந்தாள்.

ஒரு எம்என்சியின் மிகப்பெரிய பொறுப்பிலிருந்த வினோத் தன் வீட்டில் ஒரு அறையை கான்பிரன்ஸ் - காலுக்கும், வீடியோ - கான்பிரன்சுக்கும் ஏற்றவாறு தேவையான கருவிகளைப் பொருத்தியிருந்தான். ஐரோப்பியர் நேரத்தில் பணிபுரிந்ததால், மதியம்தான் அலுவலகம் புறப்படுவான். ஆனால் காலை பத்துமணியிலிருந்து அவன் அலுவலக வேலை வீட்டிலேயே ஆரம்பித்துவிடும். ஆதித்யாவை சரியாய் எட்டரைக்கு பள்ளிவேனில் ஏற்றிவிட்டு. ஒரு டீ, பின் கொஞ்சநேரம் டீ.வி. அப்புறம் இரவுவரை ஆபீஸ் வேலை. நடுவில் செல்போனில் உத்தரவுகள் இட்டுக்கொண்டோ, டீவியில் தெரியும் எதையாவது பார்த்துக்கொண்டோ உணவு.

இது ரொம்ப பிடிக்கும் என்று ஸ்பெஷல் ஐட்டம் எதுவும் கிடையாது. ஆனால் சின்னவயசில் அறிமுகமாகும் இட்லி, இடியாப்பம், கலவை சாதம், எதுவும் அவனுக்கு ஆகாது. வளர்ந்தபின் தானே பரிச்சயம் செய்துகொண்ட மேற்கத்திய கிழக்கத்திய மென்மையான உணவுவகைகளை

உத்ரா



அவன் ரசித்து உண்பது வித்யாவுக்கு புதிதாகவே இருந்தது. எந்த உணவுக்கும், சின்ன வயசில் நடந்த சம்பவங்களுக்கும் முடிச்சுப்போட்டு அவளைப் போல் மாய்ந்து போகிற ரகம் அவன் இல்லை. இரவு கூட, மெயில் செக் செய்துகொண்டோ பிளாக்பெர்ரியோடு உறவாடிக்கொண்டோ இருக்கும்போதே பசி நீக்கும் சமாசாரம் தொண்டைக்குள் இறங்கிவிடும்.

அலுவலத்திலிருந்து வித்யா திரும்புவதற்கு முன்னே வினோத் கிளம்பிவிடுவான். வார இறுதியில்தான், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்ளவே முடியும். இதிலும் திங்கட்கிழமை மீட்டிங் என்றால், ஞாயிறு அன்றே ஊருக்குப் புறப்பட்டு விடுவான். திங்கட்கிழமை ப்ளைடில் கூட்டம் வழிவதால்!

அதனால் ஊரில் இருக்கும்போது வாரநாட்களில் ஆதியை எழுப்பி, ஸ்கூலுக்கு ரெடி செய்து அனுப்புவது அவன் பொறுப்பு. குழந்தையுடன் நேரம் செலவிட ஒரு வழி!

"ஏழு வயசாகுது, அவன் ரெடியாக உதவினா போதும். அவன் பின்னாடியே போகாதீங்க, அவன் தானா கத்துக்கட்டும்" என்பாள் திவ்யா.

வினோத் ஊரிலிருந்து திரும்பி இரண்டு நாட்கள் ஆயிற்று. ஆதியை பள்ளிக்குக் கிளப்புவது அவன் முறை.

"குளிக்க வெச்சா ஏன் என்மேல தண்ணி தெளிக்கற, எப்படி ஈரமாயிட்டேன் பார். நான் இனிமேல் குளிப்பாட்டிவிடமாட்டேன். நாளைலேர்ந்து நீயே குளிச்சிக்கோ".

"ஏண்டா கண்ணு அப்பாவ படுத்தற" என்று ஓடினாள். "எல்லாம் நீ கொடுக்கற செல்லம்தான். ஆட்டம் ஆடறான். நீயாச்சு, அவனாச்சு. நீயே ட்ரஸ் போட்டுக்கடா. நான் போடமுடியாது".

"முடியாது போ! அப்பா, நீதான் தினமும் குளிப்பாட்டனும். நீதான் தொடச்சு டிரஸ் போட்டு ரெடி பண்ணணும். நான் போட்டுக்கமாட்டேன். எனக்கு இனிமே நீதான்ப்பா சாப்பாடு ஊட்டணும். இல்லன்னா, சாப்பாடே வேண்டாம்".

கத்தலில் வீடே அதிர்ந்தது. குழந்தையின் தொண்டை ரணமாகிவிடுமோ என்ற கவலை அவளுக்கு

"நாயே! வாயை மூடுடா! மரியாதையே கொஞ்சமும் தெரியல. இந்தவாட்டி நான் டூர் போகும்போது உனக்கு கிஃப்டும் கிடையாது, ஒரு மண்ணும் கிடையாது. நான் சொல்றத கேக்கமாட்டியா. ரொம்ப கொழுப்பு", என்றான்.

வினோத் பதிலுக்குக் கத்த, சத்தத்தில் வித்யாவுக்கு தலை கிர்ர்ர் என்று சுற்றியது.

"கொஞ்சம் நிதானமா சொல்லுங்க! நீங்க சொல்ற எதுவும் குழந்தைக்குப் புரியக்கூடப் புரியாது!" என்றாள்.

"எல்லாம் உன்னாலதான். அம்மா செல்லத்த நீயே கிளப்பு".

எரிச்சல் மண்டியது அவளுக்கு. மணி எட்டு. ஆதி அழ ஆரம்பித்துவிட்டால், அவனால் சாப்பிடமுடியாது. ஒரு சொம்பு தண்ணீர் ஊற்றி, துடைத்துவிட்டு, யூனிபார்மை மாட்டிவிட்டாள்.

"இரு கண்ணு, இன்னிக்கு கார்ன்ப்ளேக்ஸ் மொறமொறன்னு பால்ல போடறேன். கடகடன்னு சாப்பிட்டு ஓடிடு. ஓகே" என்று ஒருவாறு அவனை ரெடி செய்து வேனில் ஏற்றிவிட்டாள். சோபாவில் சோர்ந்து விழுந்தாள். ஆயாசத்தில் ரிமோட்டை தடவி, டீவியில் எதையோ ஓடவிட்டாள். ஆபிஸ் வேலையை அன்று வேறு ஒருவரிடம் ஒப்படைத்து, முழுநாள் விடுப்பே சொல்லி விட்டாள்.

கண்கள் டீவியில் இருந்தாலும், மனம் எங்கேயும் இல்லை. சின்ன வயது நினைவுகள் படமாய் அவளை அறியாமல் அவள் முன் வந்தன. அவளும் அவள் தங்கையும் எதற்குமே திட்டு வாங்காமல் வளர்ந்தவர்கள் என்றால் யாருமே நம்புவதில்லை. திட்டாமல் கூட குழந்தைகளை வளர்க்கமுடியுமா, அவ்வளவு செல்லம் கொடுத்தால் குழந்தை கெட்டுக் குட்டிச்சுவர் ஆகாதா? தன்னுடைய பெற்றோர் தனக்குச் செல்லம் கொடுத்ததாகவோ, எல்லோரிடமும் ரொம்ப மெச்சிப் பேசியதாகவோ அவளுக்கு ஞாபகம் இல்லை.


இதை செய்தால், உங்களை புகழ்வார்கள். ஆனால் இதை செய்தால் உங்களைத் திட்டமாட்டார்கள், எங்களைத்தான் பிள்ளைகளை வளர்க்கத் தெரியவில்லை என்று எல்லாரும் கேலிபண்ணுவார்கள் என்று கூறியே வளர்த்ததாக ஞாபகம். இதைச் செய்தால், இது நடக்கும் என்பது ரொம்ப சின்ன வயதிலேயே பதிந்தது அவள் மனதில்.

குழந்தை வளர்ப்பு என்பது ஒரு கலை, அது கடல்! எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே வழி என்று கிடையாது என்று நம்பினாள் வித்யா. குழந்தைகள் மனம் களிமண் போன்றது. கட்டிதட்டிப் போகவைப்பதோ, அழகான பொம்மை செய்வதோ, நம் கையில்தான், பெற்றோரின் கையில்தான் உள்ளது என்று எங்கோ எப்போதோ படித்ததை நடைமுறைப் படுத்தினாள்.

ஆதியின் உணவுப்பழக்கத்தை அவனுடைய எட்டு மாதத்திலிருந்து பார்த்துப் பார்த்துச் செதுக்கினாள்.

## வாழ்க மணமக்கள்!

ஆன்மீகச் சொற்பொழிவாளர் திரு தாமல் ராமகிருஷ்ணன் – திருமதி ஜெயந்தி தம்பதியரின் மகன் செல்வன் சம்பத்குமாருக்கும், சிம்சன் குழுமத்தைச் சேர்ந்த ஜார்ஜ் ஓக்ஸ் நிறுவனத்தின் பொது மேலாளர் திரு ஜெகன்னாதன் – டாக்டர் லக்ஷ்மி தம்பதியரின் மகள் செல்வி உத்ராவிற்கும் சென்னையில் அண்மையில் விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது. பலதுறை சார்ந்த எண்ணற்ற பிரமுகர்கள் மணவிழாவில் கலந்துகொண்டு வாழ்த்தினர். பல திருக்கோயில்களிலிருந்து தம்பதியருக்குப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. வாழ்க மணமக்கள்.



என்ன செய்தால் என்ன ஆகும் என்று அவன் உண்பதற்கும், அவன் உடல்நிலைக்கும் உள்ள தொடர்பை அவனாகவே அறியும்படிச் செய்தாள். அம்மா போதும் என்று அவன் சொல்வதற்கு முன்னாலேயே அவள் ஊட்டுவதை நிறுத்திவிடுவாள்.

அவனுக்கு ஒரு வயது ஆகும்போது காலையில் எழுந்தவுடன் தரும் ஒரு டம்ளர் பாலை நிறுத்திவிட்டாள்.

''பாலுன்னா ஆதிக்கு உயிரு. பச்சை பிள்ளைக்கு காத்தால பால் இல்லையா'' என்று அம்மா கேட்டதற்கு, ''அடுத்த வருடம் ஸ்கூலுக்கு அனுப்பும்போது பாலையும் குடிச்சிட்டு டிபனும் சாப்பிடமுடியாது. அதுக்காக ஆறுமணிக்கெல்லாம் எழுப்பவும் முடியாது. காத்தால ஒழுங்கா சாப்பிடட்டும்! மத்த வேலைகள்ல பால் தரலாம்மா'' என்று கூறினாள். ஒழுங்காக காலை உணவு சாப்பிட்டு பள்ளி செல்லும் குழந்தைகளில் ஒருவன் ஆதி இப்போது.

"அம்மா நீ சின்ன வயசுல பீன்ஸ் சாப்பிடமாட்டேன்னு சொன்னியேம்மா. நான் கூட அப்படித்தான். ஆனா இப்ப நான் பெரியவனாயிட்டேன், இப்ப நீ பீன்ஸ் வாங்கு'' என்றவனை வாஞ்சையுடன் பார்த்தாள்.

''சரி, உனக்குப் பிடிச்ச புடலங்காயும் வாங்கிடறேன், இரண்டும் சமைக்கிறேன். ஒருவேளை நாளைக்கு நீ பெரியவனா ஆகலைன்னா, புடலங்கா சாப்பிடு'' என்றவளை, ''இல்ல, இல்ல. நான் கட்டாயம் பீன்ஸ் சாப்பிடுவேன்மா! நான் நேத்தியே பெரியவனாயாச்சு'' என்று இடைமறித்தான். கொஞ்சம் தட்டிக்கொடுத்தால் கூட குழந்தைகள் உருகுவார்கள். பெரியவன் என்ற முத்திரைக்காக எதையும் செய்வார்கள், அவர்கள் செய்யும் எதுவும் பெரியவனாகத்தான்.

உதடுகளில் புன்னகை தவழ, "நம்ப ஆதி மாதிரி ஒரு குழந்தை கிடைக்க புண்ணியம் பண்ணியிருக்கணும்க", என்று தன்னை மறந்தே கூறிவிட்டாள். பக்கத்தில் இருந்த வினோத்தின் காதில் விழவே. "ஆமாம். இன்னும் கீழே இறைக்காம சாப்பிட தெரியல, மூணாங்கிளாஸ் போகப் போறான். நானெல்லாம் ஸ்கூலுக்கு இரண்டு சாதத்த முழுசா சாப்பிடலன்னா, அம்மா என்ன ரூம்ல வெச்சு பூட்டிடுவாங்க. நீ வெக்கற மாதிரி பிசஞ்சி பிசஞ்சி தொண்டைக்குள்ள உருண்டு ஓடற மாதிரி எல்லாம் கிடையாது. நாங்கெல்லாம் மென்னு சாப்பிடணும்னு ஒரு டப்பால சாதம், கொஞ்சம் ரசம், மோர், சிப்ஸ் ஊறுகாய் எல்லாம் தினமும் அம்மா வெப்பாங்க. ஆனா யாரும் எனக்கு சாப்பாட்ட பத்தி சொல்லல, என்ன வேணும்னும் கேக்கல. பாதி நாள், அடிக்கு பயந்து அது குப்ப தொட்டிக்குள்ளதான் போச்சு," என்றான்.

நாம் குழந்தைகளாக இருந்தபோது நம்முடைய மனமும் களிமண்ணாகத்தானே இருந்திருக்கும். பெரியவர்கள் யாரையும் குறைசொல்ல மனமின்றி ஆயாசமாய் உணர்ந்தாள்.

இரண்டு கைகளிலும் காபி கோப்பைகளுடன் வந்தான் வினோத். ஏதோ புரிந்தது போல "உண்மைதான், நீ சொல்றதும். நம்மோட வளர்ப்புலதான் எல்லாமே இருக்கு! ஒவ்வொரு வழக்கத்தையும் பாத்து செதுக்க இப்படி ஒரு அம்மா கிடைக்க அவனும், புத்திசாலி மனைவி கிடைக்க நானும் கூடத்தான் புண்ணியம் செஞ்சிருக்கணும் வித்யா" என்று கூறிக்கொண்டே அவளிடம் ஒரு காபி கோப்பையை நீட்டினான். காபி மனதுக்கும் இதமாக இருந்தது. ●